விட்டது என்று கூறினர். மீதமுள்ள மாதங்களுக்கான ஊதிய நிலுவையை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யக் கோரி நிர்வாகத்தினர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தப் பிரச்னையில் மேலும் சம்பளம் தரப்படாவிட்டால், அதிலே பணிபுரிகின்ற ஆசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் அரிசி வாங்க, புளி வாங்க, உப்பு வாங்க, துணி வாங்க என்ன செய்வார்கள் என்பதை மனதிலே எண்ணி, இந்த 1 ஆம் தேதியிலிருந்து இதுவரையிலும் தந்து வந்த 80 சதவிகித கிராண்டை 100 சதவிகிதமாக உயர்த்தி, அதை அவர்களுக்கு நேரடியாகவே வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் இனி கல்லூரி மூடப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படாது என்பதைக் கூறி, இதற்காக இந்தச் சபை ஒத்தி வைக்கப்படத் தேவையில்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பின், இப்பிரச்னை குறித்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால், இந்த நேரத்திலே இந்தச் சபையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சபைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 6(1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பானல் ஆப் சேர்மன்) நான் நியமிக்கின்றேன்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்,
2. திரு. ஆர். முத்தையா,
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா,
4. திரு. கே. கே. முத்தையா,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அடுத்து, ஆளுநர் அவர்களின் உரைமீது விவாதம் தொடரலாம்.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக தாங்கள் அறையிலே சொன்னீர்களே, அது எடுத்துக் கொள்ளப்பட வில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையிலேயே வந்து கேளுங்கள்; பதில் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு: விரைவாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். மறந்து விட்டீர்களோ என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படித்தான் மறந்து விட்டேன் என்று நினைத்துக்கொண்டு உட்காருங்களேன். ஏற்கனவே தங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன், இந்தச் சபையின் மரபைக் காக்க வேண்டுமென்று.

திரு. க. சுப்பு: நீங்கள்தானே, விரைவாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். அதற்காகத்தான் சொன்னேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுபற்றிக் கருத்துக் கூறட்டும்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நானே விளக்கம் தரவேண்டுமென்று தாங்கள் என்னை அனுமதித்த காரணத்தால் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திலுள்ள சிக்கலைப் பற்றி இங்கே நானும் முதல்வர் அவர்களும் பேசினோம். அதற்குப் பிறகு எந்த அளவிற்கு அதைப் பற்றிப் பேசுவது என்று நண்பர் சுப்பு அவர்களிடத்தில் எடுத்து விளக்கினேன். அவையினுடைய செயலாளர் அவர்களும் உடன் இருந்தார்கள். அந்த அளவுக்குப் பேசி முடிக்கிறேன் என்று சுப்பு அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். அதனால்தான் சுப்பு மாத்திரமல்ல, நான் கூட அந்த ஒத்திவைப்புத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஜூலை 13] [திரு. மு. கருணாநிதி]

தீர்மானம் வரும் என்று எதிர்பார்த்தேன். அது வராது என்று முன்கூட்டியே அறிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். வரும் என்று எதிர்பார்த்து, எந்த அளவுக்குப் பேசுவது என்று முடிவு எடுத்தபிறகு வராது என்பது ஏமாற்றத்தை அளிப்பதாக இருப்ப தால் உள்ளபடியே வருந்தத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றம் இன்னும் மூன்று நாட்கள் நடைபெறப் போகிறது. முதலமைச்சர் அவர்கள் முறையாகப் பதில் தர வாய்ப்பு இருக்கும்.

உறுப்பினர் சுப்பு அவர்கள் அவருடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒன்றும் அவசரம் இல்லை. நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளு கிறீர்கள். இன்றைக்கு இந்தத் தீர்மானம் வருகிறது என்று அறையில் கேட்டபோது சொன்னீர்கள். இன்றைக்கு சந்தர்ப்பம் இல்லையென்றால் இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. முதலமைச்சர் அவர்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கருதினால் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(இ) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. எஸ். லட்சுமணனையும் வேறு சிலரையும் கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்படுத்தியதும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் அவருடைய ஒத்தி வைப்புத் தீர்மானம் எப்படி அவசர முக்கியத்துவமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத் திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் படிக்கிறேன்—

" the serious situation arising out of the tension and scare created by the Police by falsely implicating a former member of the Parliament, Thiru T. S. Lakshmanan, and the others in a serious criminal charge." * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.